முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் திருபாண் ஆழ்வார் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

21.01.2019, திங்கட்கிழமை

1. **கலிமீட்பின் யோக சக்தியாக**
   **கருணை வடிவாக வந்த தவசியே**
   **அழியாமை தந்தருளும் அண்ணலே**
   **ஆறுமுக அரங்கனே உன் பெருமை கூறி**
2. கூறியே ஒளி சூட்சும நூலை
   குறையிலா **விளம்பி கலை திங்கள்**
   **தெரியவே சப்தம திகதி சோம வாரம்**
   **(விளம்பி வருடம் தை மாதம் 7ம் நாள் 21.01.2019, திங்கட்கிழமை)**
   **தேசிகனுக்கு திருபாண் ஆழ்வார் யானும்**
3. யானும் உலக நலமுற உரைப்பேன்
   ஓங்கார ஓசை ஒலிக்குமிடமெல்லாம்
   ஞானபலம் பெருகும் என்பேன்
   ஞானபண்டிதன் நாமசெபம் கூறி
4. கூறியே வழிபாடு செய்யுமிடமெல்லாம்
   குறையிலா இயற்கை வளம் கூடும்
   தெரியவே ஆறுமுகனார் பேரிலே
   தொடரும் அன்னதான சேவை
5. சேவை வளரும் பூமி எல்லாம்
   சித்தர்கள் மகா சக்திகளின் ஆசி பரவி
   புவனமே ஞானயுகம் ஆகும்
   புண்ணிய வழி உதவி வரும் மக்கள்
6. மக்களெல்லாம் சுத்த நெறிபடவே
   மகத்துவம் பல கூடி சிறந்திடுவர்
   தேக்கமென்பது அணுகா வசதி நிலை
   தேட்டு தனவளமும் கண்டு சிறப்பர்
7. சிறப்பு தரும் ஆறுமுகன் தலைமை
   சேவை வளரவே அமைய இருக்க
   மறுப்பில்லா அரங்க ஞானி வழி
   மக்களெல்லாம் சரணடைந்து வருதல் காண
8. காணவே கலிகாலம் வழி துன்பம்
   கஷ்டம் அனைத்தும் விலகும்
   ஞானம்பெற வேண்டி அரங்க ஞானியிடம்
   நல்தீட்சை பெற்றும் வருக
9. வருகவே வாழ்க்கை மாறும்
   வளமான சூழல் உருவாகும்
   தருமபலம் பெருகி வருதலுற
   தரணியே எல்லா வகையிலும்

10. வகையிலும் சமத்துவ நிலை கூடி
வளமுற எல்லா தேசங்களும்
பகை பேரிடர்கள் இல்லா
பக்குவம் ஓர்மைபட விளங்கி

11. விளங்கி கலியுகம் தானும்
வேலவன் சக்தி ஆளுகின்ற
களங்கமிலா ஞானயுகமாக மாறும்
கண்டுரைத்த ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் திருபாண் ஆழ்வார் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

துன்பம்மிக்க கலியுகத்தின் துன்பங்களிலிருந்து மக்களைக் காத்து கலியுகத்தினை ஞானயுகமாக மாற்றியமைக்கவே யுகமாற்ற மகா ஞானியாக மகா யோக சக்தியாக கருணையே வடிவான முருகப்பெருமானின் அவதாரமாக கடவுளின் சக்தியாக மரணமிலாப் பெருவாழ்வை தந்தருளும் மகா ஞானியாக அவதரித்திட்ட ஆறுமுக அரங்கமகா தேசிகனே அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் தை மாதம் 7ம் நாள் 21.01.2019, திங்கட்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே திருபாண்ஆழ்வார் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் திருபாண்ஆழ்வார்.

ஓங்கார ஓசையாகிய முருகப்பெருமானின் திருநாமங்கள் ஒலிக்கும் இடமெல்லாம் ஞானபலம் பெருகிடும் என்பேனப்பா. ஞானபண்டிதன் முருகப்பெருமானின் நாமஜெபங்களை மனம் உருகி சொல்லி வழிபாடு செய்கின்ற இடமெல்லாம் குறைவற்ற வகையிலே இயற்கை வளம் பெருகி நிற்குமப்பா. முருகப்பெருமானை முன்னிறுத்தி அன்னதானம்தனை தொடர்ந்து செய்கின்ற இடமெல்லாம் சித்தர்களின் மகா சக்திகளின் ஆசிகள் பரவி உலகமே ஞானயுகமாக ஆகிடுமப்பா.

தானதருமப்பணிகளிலே தொண்டுகள் செய்தும் பொருளுதவிகள் செய்தும் தன்னலமற்று தொண்டுகள் செய்தும் புண்ணியவழிதனிலே உதவிகள் செய்து வருகின்ற மக்களெல்லாம் அரங்கன் கூறும் தூயநெறியினை ஏற்று அதன்படி நடந்து மகத்துவங்கள் பல பெற்று சிறப்பான வாழ்வினை வாழ்ந்திடுவார்கள். தடையே இல்லாத செல்வநிலை பெருகி நல்ல வருவாயுடன் வசதி வாய்ப்புகளுடன் பெரும் பொருள் சேர்க்கையும் உண்டாகிடக் கண்டு சிறப்படைவார்கள்.

சிறப்பான ஞான ஆட்சியை தருகின்ற முருகப்பெருமானின் தலைமையில் சேவைகள் பிரம்மாண்டமாய் உலகினில் நடக்க இருக்கின்றதப்பா. அத்தகைய பிரம்மாண்டமான யுகமாற்ற செயல்களெல்லாம் தடையின்றி ஆறுமுக அரங்கமகா தேசிகனார் மூலமாக நடப்பதினால் மக்களெல்லாம் ஆறுமுக அரங்கன் திருவடிகளை பயபக்தியுடன் வணங்கி அரங்கன் திருவடிகளே கதியென சரணடைந்து விட்டால் கலியுகத்தினால் வருகின்ற துன்மெல்லாம் விலகி ஓடிடும்.

அவரவரும் ஞானம் பெற வேண்டும் என்றே நோக்கிலே ஆறுமுக அரங்கமகா தேசிகனாரிடம் தீட்சை உபதேசம் அடைந்திட தீட்சை உபதேசம் அடைந்தவர் வாழ்க்கை நல்வாழ்வாக மாறும். அவர்க்கு வளமான சூழ்நிலைகள் எல்லாம் விரைந்து அமைந்திடும். அவர்கள் தருமங்களை செய்து வர, அவரவர்க்கு உண்டான தர்மபலம் பெருகி உலகமெலாம் தருமசிந்தை வளர்ந்து உலகமெங்கும் மக்களிடையே சமத்துவநிலை பெருகிடும்.

மக்களிடையே சமத்துவநிலை பெருக பெருக, உலகின் எல்லா நாடுகளும் தங்களுக்கு உள்ள பகைமை உணர்வை மறந்து பகையினால் உண்டாகும் பெருந்துன்பங்கள் இல்லாமல் போரற்ற நாடாய் சண்டை சச்சரவு இல்லாத நாடுகளாய் பக்குவமுடன் எல்லா நாடுகளும் ஒற்றுமையுடனும் ஒன்றிணைந்து செயல்படும்.

ஆதலினால் கலியுகம் முருகப்பெருமான் ஆட்சி செய்கின்ற களங்கமற்ற தூய்மையான ஞானஆட்சியாக மாறி உலகமே ஞானயுகமாக மாறிடும் என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் திருபாண் ஆழ்வார்.

–சுபம்–